**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.1073/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மாரியம்மாள், வயது 46 |
| Father Name/Husband Name | : | செல்வமுருகன் |
| Village | : | மூப்பன்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23th day of February 2026.

**(A1, A2 present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது மூப்பன்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். அ.சா.1 எனது கணவர். 12.04.2025 அன்று காலை 06.30 மணிக்கு எனது வீட்டின் முன்பு 1 வது எதிரி என்னைப் பார்த்து உன்னை தூக்கி ஓத்தால் யார் கேட்பார் என்று அசிங்கமாகத் திட்டினார். அ.சா.1, 1 வது எதிரியிடம் ஏன் அசிங்கமாகத் திட்டுகிறாய் என்று கேட்டதற்கு 1 வது எதிரி அ.சா.1 ஐ தள்ளி, எத்த வந்தார். அதற்குள் நான் அ.சா.1 ஐ பிடித்துக் கொண்டேன். எனது கணவருக்கு ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தால் நான் எனது கணவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

2 அங்கு எனது கணவர் அ.சா.1 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது நாங்கள் எங்கள் வீட்டின் முன்னாடி பரிமாறுவதற்கு எதிரிகள் இருவரும், பிரச்சனை செய்து வந்ததாக சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. சம்பவத்திற்குப் பிறகு நான்தான் இருச்சக்கர வாகனத்தில் அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல, எனது கணவர் இருச்சக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்திருந்தேன். எனது மருமகன் எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை, நானும் , எனது கணவரும் தான் இருந்தோம், வேறு யாரும் இல்லை. எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடம் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல, நான் தெருவில் பரிமாறுவதற்கு எதிரிகள் திட்டி வந்துள்ளார்கள். இது சம்பந்தமாக நான் புகார் மனு கொடுக்கவில்லை. மூப்பன்பட்டி கீழத்தெரு என்பது கிழமேல் தெரு ஆகும். மேற்படி கிழமேல் தெருவிற்கு வடக்கே வீடு உள்ளது, பின் பக்கம் வீடு கிடையாது என்றால் சரிதான், பிரச்சனை நடந்த வீடு அருகே வேறு வீடுகள் கிடையாது.

4. எனது கணவர் அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு குடிப்பார், அதன் பிறகு குடிப்பது கிடையாது. நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல, எதிரிகள் எனது கணவரை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி எனது கணவரை காலால் மிதித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருப்பதால் குடலில் புண் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் வயிற்று வலி இருந்ததாலும், குடலில் ஓட்டை இருந்ததாலும், அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. எனது கணவருக்கு வயிற்றில் வலி இருந்ததால் தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால் சரியல்ல, எனது கணவர் விசேஷங்களுக்குத்தான் குடிப்பார், ஆனால் அறுவை சிகிச்சை செய்த பிறகு குடிப்பது கிடையாது.

5. எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடப் பிரச்சனை இருப்பதால் எனது கணவருக்கு ஏற்பட்ட வலியை வைத்து பொய்புகார் கொடுக்கப்பட்டு , அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.